உ
சிவமயம்



# யாழ் - வலிகாமம் வடக்கு - கட்டுவன்

உயர் வேளாண்குல தலைவர்

அமரர் உயர்திரு க. அப்பாக்குட்டி அவர்களின்

உத்தம புத்திரன்

## உயர்திரு அ. நல்லையா அவர்கள்

(ஓய்வுபெற்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர்)

6-01-1987 இல்

பதம் எய்தியமை குறித்த

# ...வு மலர்

வெளி... ...க்கள்

அ...சய ஆண்... ...13 ஆம் நாள்

...—C... ...7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நினைவு அஞ்சலி



## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண் [சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் [வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்தபொற் பாதமும் காணப் [பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே.

— திருநாவுக்கரசுசுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருமுறைத் திரட்டு

## தேவாரம்

### திருச்சிற்றம்பலம்

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
 தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
 மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி
 நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
 கோணமா மலையமர்ந் தாரே.

— திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
 மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
 பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
 அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள்தன் னாமங் கெட்டாள்
 தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே

— திருநாவுக்கரசு சுவாமிகள்

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.

— சுந்தரமூர்த்தி சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

— மாணிக்கவாசக சுவாமிகள்

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

— திருமாளிகைத்தேவர்

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இட மாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறு துமே

— சேந்தனார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்

— சேக்கிழார் சுவாமிகள்

திருச்சிற்றம்பலம்

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே

— அருணகிரிநாதர்

## ஆன்மா சாந்தி பெறுக

மருதடி விநாயகன் திருவடி போற்றி
கருவினை கழியும் செவ்வேள் போற்றி
கட்டுவன் ஞான வைரவா போற்றி
எட்டும் வினைதீர் அரிகரா போற்றி
இயட்டம்ப சிட்டி மாரியே போற்றி
வீரத் திருவாம் வீரபத்திரா போற்றி
விளங்கிய அறிவில் விளங்கிய திருமகன்
நல்லை யாவின் நல்லுயிர் சாந்தி
என்றும் பெறுகப் போற்றி இசைத்தோம்
நன்றென நலமுற நாமும் தொழுதுய்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## அமரர் உயர்திரு. அ. நல்லையா அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

### காப்பு

நல்லையா நம்பியிந்தன் நற்சரிதம் எடுத்துரைக்க
பொல்லா வினையகற்றும் விநாயகன்தாள் காப்பாமே.

### பிறப்பு

வேளாண்மையும் தாளாண்மையும் உயிர்நிலையாகவுள்ள காராளர் வாழும் கிராமம் கட்டுவன் என்னும் நற்பதியாம். யாழ்குடாநாட்டின் வடபால் வலிகாமம் வடக்கில் அமைந்துள்ள இக்கிராமம் பல்வகை வளங்களாலும் சிறந்து பொழிந்து விளங்குகின்றது. திருவிலும், கல்வியிலும் உயர்வினைப்பெறும் இக்கிராம மக்கள் பெருங்குடி மரபில் பேராண்மை மிக்கவர். கமத்திறைச் செல்வன் கந்தர் என்பவரும் இல்லத்தரசி நன்னித் தங்கமும் கருத்தொருமித்து வாழ்ந்த இல்லற வாழ்வில் முதன் மகனாக தோன்றியவர் உயர்திரு. அப்பாக்குட்டி அவர்கள். இவர் நடுநிலையாளராய் நல்லாறொழுகிய உத்தமர் ஆவர். இவர் தன் குலமரபில் வந்த பெண்ணில் நல்லாள் இலட்சுமி மாதினைத் திருமணம் செய்து சான்றோர் ஆகிய நல்வழி நின்று புகழ் பூத்து விளங்கினர். இவர்களின் மங்கள மனைமாட்சியில் புகழொடு தோன்றிய புதல்வர்களில் நான்காம் மகனாக 1926-ம் ஆண்டு ஆனி மாதம் 22-ம் நாள் நல்வோரையில் புவனியில் தோன்றினார் -- அமரர் உயர்திரு நல்லையா அவர்கள்.

### படிப்பும் தொழிலும்

அறிவறிந்த புண்ணிய புத்திரனாகத் தோன்றிய தம்மகனை பெற்றோர் பேருவகையுடன் பாராட்டி சீராட்டி நல்லையா என்னும் நாமகரணம் சூட்டி வளர்த்தனர். நல்லையா மகவும் வளர்பிறைபோல் நாளும் நலம் பொழிய வளர்ந்து ஐந்தாம் வயதை அண்ணியகாலை ஊரில் அமைந்த ஞானோதயா வித்தியாசாலையில் கல்வி கற்க வைத்தனர். கலைமகள் கடாட்சம் இவர்பால் இருந்தமையின் எளிதாக ஆரம்பக் கல்வியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று முடிந்ததும் கந்தரோடையில் சிறந்து விளங்கும் ஸ்ரீஸ்கந்த வரோதைய கல்லூரியில் உயர்கல்வியைப் பெற்று நல்ல சித்தியை எய்தினார். கற்கும் நாளில் விளையாட்டுத்துறையிலும் சிறப்பாக உதைபந்தாட்டத்திலும் பலரும் போற்றும் வீரராக விளங்கினார். உயர்கல்வி முடிந்ததும் இலங்கை அரசசேவையில் தேர்ந்தெடுக்கப்பட்டு எழுதுவினைஞராக சில ஆண்டு காலம் பணியினைப் புரிந்தார். இவரின் தோற்றப் பொலிவும் ஆண்மையும் நிமிர்ந்த நன் நடையும் கூரிய பார்வையும் விளையாட்டு விற்பனவும் இலங்கை அரசு நகர்காவல் திணைக்களத்தில் மேற்பார்வையாளராக (Inspector) கடமை ஆற்ற வாய்ப்பு அளித்தனர். இவர் இப்பதவியில் கடமை தவறு கண்ணிய புருடராக மரண பரியந்தம் வாழ்ந்தனர். இப்பதவியில் அதிக மதிப்புப்பெற்ற அமரர் நல்லையா அவர்கள் சுயநலம் சிறிதுமின்றி கனவானாக விளங்கினார். குற்றமான வழிகளில் சிறுபொருள்தானும் சுட்டாது வாழ்ந்தவர் ஆவர்.

## திருமணவாழ்வு

அரசசேவையில் எழுதுவினைஞராக அமரர் நல்லையா அவர்கள் கடமையாற்றும் காலத்தில் திருமணவாழ்வை விழைந்து மயிலிட்டி தெற்கில் வாழ்ந்த மலாயன் பென்சனர் தில்லையம்பலம் கந்தையா தம்பதிகளின் செல்வப் புதல்வி பொன்மலர் மங்கையை 1952-ம் ஆண்டு திருமணம் செய்தார். இவர்கள் இருவரும் நன்னெறி நின்று நல்வாழ்வு வாழும் காலத்தில் அறிவுடைப்புதல்வர் மூவரைப் பெற்றெடுத்தனர். கருவிலே திருவாய்க்கப்பெற்ற இப்புதல்வர்களில் இருவர் பெண்கள்; ஒருவர் ஆண். மூத்த மகளான பவானி என்னும் பொற்பாவை கற்பன கற்றுத் தெளிந்ததும் திருமணமானார். இவரது கணவன் ஜெயகுலசிங்கம் என்பவர் இலங்கை வங்கியில் பணி புரிந்து தேசநிலைமை காரணமாக வேலையைவிட்டு கனடாவில் பதவி வகிக்கிறார். இவர்களின் அருமருந்தன்ன நல்வாழ்வில் தற்பொழுது செல்வன் ராஜகுலசேகரம் செல்விகள் அனுசா பிரியதர்சினி என்னும் மூன்று புத்திரச் செல்வங்களைப்பெற்று மகிழ்கின்றனர். அடுத்த மகளான மனோகரி என்னும் மங்கை நல்லாள் B. A. C. பட்டமெய்தி கொழும்பு பல்கலைக் கழகத்தில் உயர்தர கணித விரிவுரையாளராக சில்லாண்டு பணி செய்த பின் அமெரிக்கா சென்று மேலும் உயர்கல்வியை தொடர்ந்தும் கற்றுக் கொண்டு பணி புரிகின்றார். இவர் கொழும்பு பல்கலைக்கழக பட்டதாரியும், ஆங்கு விரிவுரையாளராகவும் இருந்த சிவகணேஸ் என்னும் செம்மனச்செல்வரை திருமணம் செய்தார். இவரும் அமெரிக்காவில் பொறியியல்துறையில் பயின்று கொண்டிருக்கிறார். மகன் செல்வன் நாகேந்திரன் என்பவர் - இங்கு கல்வியை கற்றுத் தேறியபின் ஜேர்மனி தேசம் சென்று பணி செய்கின்றார். இப் பிள்ளைகள் மிக இளமையாகஇருந்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது இவர்களின் தாயார் நோய்வாய்ப்பட்டு சடுதியில் கால மானார். அருமை மனைவியின் இழப்பு அமரர் நல்லையாவை நிலைதளரச் செய்தது. நொந்த உள்ளத்துடன் தன் பிள்ளைகளை தாயினும் இனிய தாயாகவும் தெய்வமாகவும் இருந்து பரிபாலித்தார். பதவியில் இட மாற்றங்கள் ஏற்படுவதால் குடும்ப நிலையை சீராக்குவதற்கு கட்டுவன் வாசியான மலாயன் பென்சனர் சின்னத்தம்பி ஆறுமுகம் தம்பதி களின் செல்வப் புதல்வி இராஜேஸ்வரி என்னும் மங்கை நல்லாளை மறு மணம் செய்து கொண்டார். இம்மங்கை நல்லாள் கணவன் கருத்தில் ஒன் றியிருந்து தற்காத்து தற்கொண்டானையும் பேணி தகைசான்ற சொல் லையும் காத்தும் சோர்வில்லாத பெண்ணாக விளங்கி வந்ததனால் மீண் டும் இவரின் வாழ்வு வசந்தகால சோலையாகப் பூத்துக் குலுங்கியது. இவர்களின் தாம்பத்திய வாழ்வில் செல்வி, சாவித்திரி செல்வன் இராஜேந்திரன் என்னும் இரு புத்திரச் செல்வங்கள் உளர்.

இவர்கள் உயர்கல்வியில் தேறிய பின் செல்வன் இராஜேந்திரன் ஜேர் மனி சீமையில் நற்பணி புரிந்து கொண்டிருக்கிறார். அமரர் நல்லையா அவர்கள் தன் பிள்ளைகள் மீது அயராத அன்பும் மாறாத பண்பும் கொண்டவராக விளங்கினார்.

## குண நலம்

அமரர் நல்லையா அவர்கள் இளமையிலிருந்து இறக்கும்வரை தள ராத மன உறுதியும் குறையாத அறிவுத்திறனும் உடையவராக விளங் கினார். இவரின் வாக்கும் செயலும் மாறுபடாத மாண்பினை உடையன. தன் பெற்றார் இடத்தும் சகோதரர் மீதும் நிலையான நிறைவான அன் புடையவர். பெற்றார் உறவினரிடத்தும் பெருமதிப்பு செய்தவர்; மனைவி வழியிலும் மாறாத அன்பு காட்டி பேரா வாழ்வை வாழ்ந்த வர். நண்பர்களிடத்தும் அயலவர்களிடத்தும் நன்மதிப்பை நன்முறை யில் பெறும் நற்சீலம் கொண்டவர். தன் குடும்பத்தை கோயிலாக்கி பொன்மணம் கமழப் பொலிவித்தவர். கடமை செய்யும் காலங்களில் தன் மதிப்புடன் கண்ணியமாகவும் கடமையில் தவறாதவராயும் உறுதிப் பாட்டுடன் உயர்வினைப் பெற்றவர். தான்பெற்ற செல்வங்களை தன் உயிரிலும் மேலாகப் பேணி பெருவாழ்வு வாழ வைத்தவர். தன் இல் லத்தரசியை எவ்வித குறைவுமின்றிப் பேணிப் பாதுகாத்த பெருமையை உடையவர். தன் மைத்துன, மைத்துனியரை மனமறுவின்றி சேர்த்து வாழ்ந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதிக்காலம்

நற்குண நற்செயல் படைத்த அமரர் நல்லையா அவர்கள் எல்லோருக்கும் இனியராய் எல்லோராலும் போற்றப்படுபவராய் வாழ்கின்றபோது உடம்பில் ஏற்பட்ட நரம்புநோய் ஒன்றால் கடுமையாகத் தாக்கப்பட்டு தமது 60ஆம் வயதை அட்சய வருடம் தைமாதம் 26ஆம் நாள் திங்கட்கிழமை துவாதசி திதியில் அபர பக்கத்தில் வாடாத தன் மலை நிகர்த்த பொன்னுடலை உதறி, மனைவி கலங்கிப் புலம்பி கையறவும், புதல்வர் புத்தி கலங்கி புலம்பித் துடிக்கவும், சகோதரர் கதறிக் கண்ணீர்சிந்தவும், மருமக்கள் மனம்மறுகி திகைத்து நிற்கவும், மைத்துன மைத்துனியர் செய்வதறியாது நெக்கு நெக்குருகி நிலையழியவும், பெருப்பிள்ளைகள், மருமக்கள், பேரர் புலம்பித் துடிக்கவும், உற்றார், உறவினர், அயலவர், நண்பர், பெரியோர் அனைவரும் பேதுற்று நிற்கவும் தேவதேவன் திருவடி நீழலை அடைந்தார்.

## சாந்தி

மாய உலகில் மாண்பினைப் பெறுதலே மனித இனத்தின் உயர் நிலையாகும். இந்த நிலையைப் பெற்ற அமரர் நல்லையா அவர்கள் வாழவேண்டிய முறையில் வாழ்ந்துகாட்டி அந்த வழியே சென்று விட்டார். அனுப்பிய ஆண்டவன் அழைப்பு விடுத்தால் அதனைத் தடுத்து நிறுத்தல் எவராலும் முடியாது. ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலுட் மாண்டவர் மாநிலம் வந்ததில்லை. இவ்வுண்மையை உணர்ந்து நாமும் செய்வன செய்து அவரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வணங்குவோமாக.

ஓம் சாந்தி — சாந்தி — சாந்தி

## இரங்கல் உரைகள்

### மாமியார் திருமதி ஆறுமுகம் சுந்தர அம்மையார்:

வாழும் வயதில், வளமாக இருக்கும் காலத்தில் என் அருமை மருமகனே! நீ மறைந்தாய் என்றதும் நான் அடைந்த துன்பத்திற்கு அளவில்லை. என் கணவர் என் மூத்தமகன் இவர்களை இழந்த பெரும் துயர் மறையமுன் நீயும் சென்றது என் கவலை வானவிளிம்பு வரை தொட்டுவிட்டது. தள்ளாத வயதில் மூன்று இழையில் என் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கும் காலத்தில் என் அந்திமத்தை அணி செய்வாய் என்று காத்திருந்தேன். ஐயோ தெய்வமே! என் நினைவு பொய்யாய் கனவாய் போய்விட்டது. என் மகளின் நல்வாழ்வை வளம்படுத்திய புண்ணியப் பெருந்துரையே! உன் பிரிவு என் நெஞ்சை கனலாக வாட்டுகின்றதே. என்றுதான் கவலை தீருமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு மனைவி இராஜேஸ்வரி அம்மையார்

என்னுருயிராய் என்பெரும் தெய்வமாய் என்னுடன் வாழ்ந்த துரையே! மலைபோல் அசைவற நின்று என் வாழ்வில் ஒளிவிளக் கேற்றிய மாணிக்க மலையே! இவ்வளவு விரைவில் என்னைவிட்டுப் பிரிய என்னதான் பாவம் செய்தேனே? பதைக்கும் என் உள் ளத்தை மாற்ற இனி வகையில்லை. இருந்த விடறியாது நின்பாதமே கதி என்றிருந்த நான் இனி என்ன செய்ய முடியும், இரு புத்தி ரச் செல்வங்களைப் பாரமாகத் தந்துவிட்டு மாயமாகவே மறைந்து விட்டாய். குண்டுபட்ட மான்போல் துடித்துக்கொண்டே வாழ்நாள் முழுவதும் வாழ்வது? பொலிவிழந்தேன், பொங்கும் மண்மிழந்தேன், வாழ்க்கையின் பின்னணியில் தள்ளப்பட்டேன். வாடிய கொடிபோல் மண்ணில் துவண்டு கண்ணீர் சிந்திக்கொண்டே இருக்கின்றேன். கற்பக தருவாய் கனமதிப்பளித்த புங்கவரே! எப்போதுதான் உங்களைக் காண்பேனே?

## புதல்வர் இரங்கல்

### பவானி, மனோகரி, நாகேந்திரன்

அப்பா நீங்கள் எங்களைவிட்டு என்றும் பிரியாது வைரத்தூணாக நிலைத்திருந்து நிலைப்படுத்தினீர்கள். பிஞ்சிளம் பருவத்தில் எம் அன் னையைப் பிரிந்து பாலமுதம் அருந்தாது அரவணைப்பு இல்லாது தளர்ந்து நின்றோம். அப்பா நீங்கள் அன்றிலே எங்களுக் கேற்படாது அன்னைக்கு அன்னையாய் இருந்து வளர்த்தெடுத்து வளம் படுத்தினீர்கள். அன்னை இல்லாக் குறைறை அணுவளவும் எங்கள் மனதில் ஏற்படுத்தாது ஆகும் வழியில் நின்று ஆவன செய்தீர்கள். அம்மாவின் இடத்திற்கு தெய்வத்திற்கு நிகரான ஒரு சின்னம்மாவையும் தந்தீர்கள். குறை வில்லா நிறை வாழ்வில் எங்களை வளர்த்த அப்பா! இன்னும் வாழவேண் டிய நல்ல பருவம் இருந்தும், இதனைக் கருதாத கொடிய காலனே உங் களைக் கவர்ந்து விட்டான். எங்களை கவலைக் கடலிலே ஆழ்த்திவிட்டான்.

## புதல்வி திருமதி பவானி ஜெயகுலசிங்கம்

அன்புருவாய் என்னை வளர்த்தெடுத்த அப்பா! பேரறிவுப் பெருந் தவமே, துன்பறியா வண்ணம் சிறப்போடு வளர்த்தென்னை ஆளாக்கிய பெருமையே அப்பா.என் பெருமனமாய் உடையேன், நல்ல வாழ்க்கையை தந்தீர்கள். என் கணவரிடம் அளவிறந்த பெரும் பாசம் வைத்து அவ ரையும் உருவாக்கினீர்கள். உங்கள் இறுதி நேரத்தில் கனடாவில் இருக்

கும் என் கணவர் உங்கள் காலடியில் இல்லையே. என் நெஞ்சைக் கன லாக மேலும் வாட்டுகின்றது. நான் பெற்றெடுத்த இப் பேரப்பிள்ளை கள் மீது வைத்த கொள்ளையின்பத்தையுமா மறந்து விண்ணுலகை விரும்பினீர்கள். உங்கள் உயிரை மீட்க எவ்வளவோ பாடுபட்டேன்; அவ்வளவும் காட்டில் எறித்த நிலவாக பயனற்றுப் போய் விட்டதே அப்பா. மண்ணை மறந்து நீங்கள் விண்ணை அடைந்தாலும் உங்கள் ஒளி உருவம் என் கண்ணில் பிரகாசித்துக் கொண்டே இருக்கிறது. என் செய்வோம் இயற்கை நியதிகளை மீற முடியாத நிலையில் அப்பா உங்களை தெய்வத் திருவுருவாய் ஆராதிக்கின்றேன்.

## புதல்வி மனோகரி சிவகணேஸ்

செய்தவத்தால் என்னைப் பெருமகளாய் பெற்றெடுத்த அப்பா பெற்ற பெரும் பேற்றினால் பெயரற்ற என்னை பிறந்த பொழுதி லும் பெரிதுவந்த எந்தையே! நல்ல பண்புகளை எல்லாம் நயந்த ளித்த தந்தையே, என்னைப் பட்டதாரியாக்கி நற்பதவியில் வைத்து, நல்ல கணவரையும் தந்து ஒளிரச்செய்த அப்பா, நானும் என் கண வரும் உங்கள் அந்திம காலத்தில் உங்கள் அருகில் இல்லாது அமெரிக்காவில் துடித்த துடிதுடிப்பை சொல்லவே முடியாது. நினைந்து நினைந்து நெக்கு நெக்குருகி இரத்தக்கண்ணீரையே சிந்திக்கொண்டி ருக்கிறோம்.

## புதல்வன் செல்வன் நாகேந்திரன்

கடலிலும் ஆழமாய் விண்ணிலும் விரிவாய் என்மீது அன்பை அள்ளி அள்ளிச் சொரிந்த என் அப்பா! தீநெறிப்படராது நன்னெறி திருத்தி நல்ல கல்வியை தந்த என்நெஞ்சத்து ஞான உருவே! கண் காணுச் சீமையில் – ஜேர்மனிக்கு – அனுப்பிவைத்தோ அண்டர் நாயகனை அடைக்கலம் புகுந்தீர்கள். உங்கள் பொன்னுடலைக்கூட காண முடியாமல் போய்விட்டதே. அப்பா! எண்ணிய எண்ணமெ லாம் உங்கள் பிரிவென்னும் பேரிடியால் தகர்த்து குட்டிச் சுவரா னேன். தந்தை மகற்கு ஆற்றும் நன்றியை தனித்துவமாகத் தந்த அப்பா! மகன் தந்தைக்கு ஆற்றும் உதவியை தந்து முடியவில்லையே என்ற பெரும் கவலையே கவலை, என் மனதில் தீப்பிழம்பாக சுவா லிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதல்வி செல்வி சாவித்திரி

அன்புக் கடலாய் அறிவுச் சுரங்கமாய் எங்களைப்பெற்று பெரிதும் பேணி வளர்த்த அப்பா! நற்குணக் குன்றாய் மற்றவர் மதிக்க வளர்த்த எந்தையே! வாழ்க்கைச் சோலையின் வாயிற்படியில் நிற்கும் எந்தன் வசந்தகாலம் காண முந்தியே மறைந்துவிட்டீர். புதல்வரே செல்வம் என்று புண்ணிய மூர்த்தியாக வாழ்ந்த நீங்கள் அந்தப் புண்ணியப் பேச்சை காண்பதற்கு எவ்வளவு ஆசைப்பட்டுக் கொண்டிருந்தீர்கள். அந்த ஆசையை தவிடு பொடியாக்கி விட்டானே அந்தகன்! அப்பா இருக்கிறார் எங்களுக்கு என்னகுறை என்று இறுமாந்திருந்தோம். ஆனால் உங்களின் பிரிவால் பஞ்சைகள் ஆகிவிட்டோம். உண்ணும்போதும் உறங்கும்போதும் உங்கள் அன்புருவே எங்கள் கண்களில் நிழலாடிக்கொண்டிருக்கிறது. நினைக்க நினைக்க அப்பா எங்கள் உள்ளம் மெழுகாய் உருகிக்கொண்டிருக்கிறது. அப்பா உங்களைப்போல் ஒரு அப்பாவை எப்பிறப்பில் காண்போம் இனி?

## புதல்வன் செல்வன் இராஜேந்திரன்

அறிவை அறியவைத்த என் அப்பா! நற்பண்பில் விளைநிலமாய் என்னை வளர்த்தெடுத்த தந்தையே! தந்தைசொல் மிக்க மந்திரமில்லை என்ற அருள்வாக்கில் என்றும் நான் வாழ்ந்தேன். வாழ்வில் உயர்வதற்காக மேலைச் சீமைக்கு என்னை அனுப்பிவைத்துவிட்டே மாயமாய் மறைந்துவிட்டீர்கள். தங்களின் உடலைக்கூட காணமுடியாத துர்ப்பாக்கியனாக ஆகிவிட்டேன். எண்ணி எண்ணியே அப்பா நான் அழுதுகொண்டே இருக்கின்றேன். என் ஆறாத்துயரை துடைப்பவர் எவருமிலர். விதி இல்லேல் என் செய்வேன். கொள்ளிக்குக் கூட என்பிறப்பு பயன்படவில்லையே. படித்தென்ன, உழைத்தென்ன, வாழ்ந்தென்ன என்ற நிலையில் எல்லாம் மறந்து ஏழையாய் விட்டேன் அப்பா! அளக்கவொண்ணா அன்பினை என்மீது சொரிந்து என்னைப் பேராக்கி ஆளாக்கிக் காண விழைந்த விளைவை நான் ஈடுசெய்ய முன்னமே சென்றுவிட்டீர்களே அப்பா! சென்றுவிட்டீர்களே, என்றுதான் இந்தக்கவலை என்னைவிட்டு நீங்குமோ? அப்பா நீங்கள் எங்குதான் இருந்தாலும் அப்பா நீங்கள் விரும்பிய விருப்பங்களையெல்லாம் தப்பாது நிறைவேற்றுவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகன் ஜெயகுலசிங்கம்

அன்புக்கோர் உறைவிடமாய் அறிவுக்கோர் இலட்சியமாய் ஆதரவுக்கோர் கற்பகதருவாய் எம்முடன் பெரிதுவந்து வாழ்ந்த என் அருமை மாமா! எங்களுக்கு எவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்டாலும் எள்ளளவும் பாதியாது பேணிக்காத்த மாமா! உங்களைப்போல் ஓர் அரிய மாமா இனிமேல் கிடைக்கப் போவதில்லை. நீங்கள் சிறிது சுகயீனப்பட்டாலும் எவ்வளவு மனம் துடித்தேன். நீங்கள் சுகபெலமாய் இருப்பீர்கள் என்று எண்ணியே உங்கள் மகளையும் என் பிள்ளைகளையும் உங்கள் பாதுகாப்பில் வைத்துவிட்டு மேலைச் சீமைக்குச் சென்றேன். அதற்கிடையில் நீங்கள் விண்ணகம் சென்றுவிட்டீர்கள். விள்ளமுடியாத பெரும் துயர் என் நெஞ்சை அடைக்கிறது. என் ஆக்கத்திற்காக அரும்பாடுபட்ட மாமா அருகிருந்து தங்கள் அரிய உடலைக் காணமுடியாதவனாய் விட்டேனே. என்னபாவம் செய்தேனோ?

## மருமகன் சிவகணேசன்

படிப்பால் உயர்ந்தேன், படிப்பால் உயர்ந்த தங்கள் திருமகளை திருமணமும் செய்தேன். ஆக்கத்திற்காக அமெரிக்காவுக்கும் சென்றோம். சென்ற சில நாட்களுள் மாமா நீங்கள் மறைந்துவிட்டீர்கள். திருமணச் சங்குநாதம் கூட எங்கள் செவியைவிட்டு மறையவில்லை. தங்களின் இனிய பண்புகளோடு கூட இணைந்து வாழக்கூடிய விதி கூட வாய்க்கவில்லையே. தங்களின் அரிய மகளின் பண்புகளை வைத்துக்கொண்டே மாமா உங்கள் பொன்னுயிரோடு பொற்புற உறவாடுகின்றேன். விதியை மீற எவராலும் முடியாது. ஆயினும் மாமா உங்கள் வழியே நின்று வாழ்வேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைக்க இனியவர்

அமரர் திரு அ. நல்லையா அவர்கள் என் இனத்தவர் மட்டுமன்றி எல்லாருக்கும் இனிய பண்பினர் என்பதை நான் நன்கு அறிவேன். ஆரம்பத்தில் ஆங்கில ஆசிரியராக நியமனம்பெற்று பின் பொலிஸ் தலைமைக்காரியாலய திணைக்களத்தில் எழுதுவினைஞராக இருந்து அப்பொழுதைய ஐ.ஜி.பி. அலுவிகார அவர்களின் அபிமானத்துக்கு ஆளாகி அவரின் அனுசரணையுடன் சப்–இன்ஸ்பெக்டராகி பின் இன்ஸ்பெக்டராக உயர்வுபெற்று மேலும் மேற்பதவியுயர்வு பெற்றார்.

எவர்களுடனும் இன்முகம்காட்டி பேசும் பண்பாளர். ஆபத்துக் காலத்தில் "அனைவருக்கும் ஆற்றுஞ உதவி புரியும் சால்பினர்." சமயத்துறைகளில் பெரிதும் விருப்புடையர். விநாயகப்பெருமானிடத்தில் பெரும் பற்றுடையராகி அவருக்கென ஒரு பொன் உருவம் அமைத்து வருடாவருடம் அபிஷேகம் செய்து மன அமைதி பெற்றவர். விருந்தினரை ஓம்புதலில் "வள்ளுவன் வழியில் நின்றவர்".

அமரர் நல்லையா குறுக்கு வழியில் பொருள் தேடாது நேர்மையான வழியில் நின்று நிலைபெற வாழ்ந்தவர். தன் தேவைகளை குறைத்தவர். தன் இனத் தேவைகளை நிறைத்தவர். இவ்வளவு விரைவில் விரைந்து விடுவாரென்று நான் எதிர்பார்க்கவேயில்லை, நினைக்கவுமில்லை. எனினும் நிகழ்ந்துவிட்டது. நிச்சயமானது மரணமொன்றே என்ற மனச்சாந்தியுடன் அவரை இழந்து துயரப்படும் மனைவி, மக்கள், குடும்பத்தினருக்கு என் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அமரர் நல்லையா அவர்களின் ஆன்மா சாந்தியடைவதாக.

ஓய்வு பெற்ற ஆசிரியர்

**சரவணமுத்து கந்தவனம்** அவர்கள் வழங்கிய நினைவுரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி செலுத்துகின்றோம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்."

என்ற வான்புகழ் வள்ளுவன் வாக்கிற்கிணங்க வாழ்ந்தவர் திருவாளர் நல்லையா இன்ஸ்பெக்டர் ஐயா அவர்கள். இவர் எமது சமூகத்திற்கு கிளைவிட்டு நிழல் கொடுக்கும் ஆலமரம் போல் ஆற்றிய அரும் பணிகள் பல்துறை சார்ந்து விளங்கின என்பதனை அவர் பொலிஸ் சேவையில் கடமையாற்றிய இடங்களிலும், அவர் வகித்த பதவிகளைக் கொண்டும் எவரும் இலகுவில் புரிந்து கொள்ள முடியும். அவர்கள் தனக்கென ஒரு வழி வகுத்து பிறர்க்கும் வழிகாட்டி வாழ்ந்த உத்தமர்.

ஒரு மனிதன் பிறக்கிறன். இறக்கிறன். அவன் வாழும் இடைக்காலத்தில் அவன் ஆற்றும் பணிகளின் சிறப்பே அவனது வாழ்வை முழுமையாக்குகின்றன.

பள்ளிப்பிள்ளையாய் பரமேஸ்வராக்கல்லூரியில் இருந்து பொலிஸ் பகுதி வரைக்கும் சிறந்த உதைபந்தாட்ட வீரனாய் திகழ்ந்த உத்தமர். அவரது சேவைச் சுவடுகள் பதியாததுறைகளோ இல்லையெனலாம். "பேரறிவாளன் திரு" அனைத்து மக்களுக்கும் பயன்தருவது போல், அமரர் நல்லையா ஐயாவின் சேவை சகல துறைகளிலும், உத்தியோகஸ்தர்களுக்கும், மக்களுக்கும் பயன்பட்டதை மறக்க முடியாது.

ஓர் இலட்சியத்தோடு வாழ்ந்து அனைத்து ஊழியரின் மனதிலும் அழியாத ஓர் இடத்தைப் பெற்றுள்ளவர் அமரர் நல்லையா ஐயா அவர்கள். இன்றிருப்பார் நாளையில்லை என்ற பெருமை படைத்த இவ்வுலகில் அவர் பதித்து விட்டுச் சென்ற சுவடுகள் அனேகம். அவர் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலமரம்; அந்த நிழலில் தங்கியவர்கள் அந்த மரம் சாய்ந்து விட்டதால், வேதனையால் வாடுகிறார்கள். ரோசா மலரைப் பறிக்கையில் முட்கள் காயப்படுத்திக் கொள்வதும் உண்டு. ஆனால் அதன் அழகில் வேதனை தெரிவதில்லை, அவரும் அது போன்றவர்தான்.

அன்புள்ளமும், உறவு மனப்பான்மையும், உதவி செய்யும் மனவியல்பும் கொண்ட இவர் எப்பிரச்சனை வந்தாலும் மனந்தளரவிடாமல் தான் மேற்கொண்ட கருமத்தில் வெற்றிகாணும் வரை தொடரும் மனஉறுதியும், விடாமுயற்சியும் கொண்டவர். பிரச்சனைகளைக் கண்டு என்றைக்குமே திரு. நல்லையா ஐயா பின் வாங்கியதில்லை. எதிர்நீச்சல் அடித்து வெற்றிவாகை சூடுவதே அவரின் இயல்பாக இருந்தது.

அவரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தவர்க்கு ஆறுதல் கூறவறியேன். அவருக்கு நாம் செலுத்தும் புனித அஞ்சலி. திருவாளர் நல்லையா ஐயா அவர்களின் ஆத்மா நித்திய ஆறுதலையும், அமைதியையும், ஆனந்தத்தையும் அடைய ஆண்டவனை வேண்டிக் கொள்ளுகின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!

மனைவி, மக்கள்,
" மலர் விலா "
இணுவில் மேற்கு,
இணுவில்.

வை. விநாயகமூர்த்தி,
(பொலிஸ் சார்ஜன்)
காங்கேசன்துறைப் பிரிவு,
பொலிஸ் நிலையம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி உரை

அமரர் நல்லையா பொலிஸ் பரிசோதகர், அவர்களை அனேக ஆண்டுகளாக எனக்குத் தெரியும். நல்ல பணிகள் எங்கு நடைபெற்றாலும் அங்கு முன்னின்று உதவும் மனப் பான்மை அவருக்கு உண்டு. இதனால் மக்கள் பெரும் பயன் பெற்றார்கள்.

" தள்ளா விளையும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் உடையது நாடு "

என்பது வள்ளுவர் வாக்கு. தக்கார் என்பவர் தகுதி யுடையவர். ஊரின் பெருமைக்கு இத்தகைய நன் மக்கள் பங்கு இன்றியமையாதது.

அமரர் நல்லையா அவர்கள் பொலிஸ் சேவையில் இலங்கையில் எல்லாப் பகுதிகளிலும் சேவையாற்றி ஈற் றில் காங்கேசன்துறை கள்ளக்குடியேற்ற கட்டுப்பாட்டு பொலிஸ் பகுதியில் வட பிராந்திய பொறுப்பாளராக கடமையாற்றி தனது அறுபதாவது வயதில் 1986 ஆம் ஆண்டு சேவையில் இருந்து இளைப்பாறினார்.

அமரர் நல்லையா அவர்கள் எந்த விடயத்தையும் ஒளிவு மறைவின்றி வெளிப்படையாகவே பேசுவர். அத னால் பலர் அவர் மீது மனத்தாபம் கொண்டதுண்டு. ஆனால் அவர் அதனைப் பொருட்படுத்தியது கிடையாது. அவரைத் தூற்றியவர்கள் பலருக்கு ஆபத்துச் சமயத்தில் அவர் செய்துள்ள உதவி என்றுமே மறக்க முடியாத தொன்று.

ஆகவே அமரர் அ. நல்லையா அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து நிற்பதோடு அவர்களுடைய குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இ. சுந்தரநாதன்,
பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி,
காங்கேசன்துறைப் பிரிவு;
பொலிஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

15-2-87

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

## உயர்திரு அ. நல்லையா அவர்களின் உடன்பிறப்பாளரின் நாமா வழிகள்

**உடன்பிறப்பாளர் :**

A. திரு அ. நமசிவாயம் (அமரர்) : தி.ம. கமலாம்பிகை (அமரர்)
(தொலைபேசி இலாகா — மலேஷியா)

B. திருமதி தெய்வானைப்பிள்ளை தி.ம திரு. வ. தம்பையா (அமரர்)

C. திருமதி இராசம்மா தி.ம திரு. க. குட்டித்தம்பி (அமரர்)

D. திரு. அ. கனகசபை தி. ம. புவனபூபதி அம்மையார்

பெருப்பிள்ளைகள்:

A) திருமதி யோகராணி — மலேஷியா
செல்வன் ந. யோகராசா — மலேஷியா
செல்வன் ந. அருள்ராசா — மலேஷியா

D) செல்வன் க. பாஸ்கரன் (ரகு) லண்டன்
செல்வி க. பாமினி

மருமக்கள்:

B) திருமதி தங்கரட்ணம் துரைசிங்கம்
திருமதி செல்வமணி சிவப்பிரகாசம்
திருமதி விமலாதேவி கங்காதரன்
திரு. த. செல்வரட்ணம் : தி.ம. நந்தினி
(பொலிஸ் பாரின்)
செல்வன் த. குலசிங்கம் பாரின்

C) திருமதி பத்மாவதி இரட்ணசிங்கம் (அப்போ)
திருமதி மங்களபூபதி செல்வரட்ணம்
(ஆசிரியை) P. W. D.
திருமதி மல்லிகாதேவி செல்வரட்ணராஜா
திருமதி மங்களேஸ்வரதேவி கணேசலிங்கம் - லண்டன்
திருமதி இந்திராணி விஜயகுமார் — லண்டன்
திரு கு. கருணாகரன் - தி. ம. விமலாதேவி — லண்டன்
திருமதி சந்திரதேவி விமலதாஸ் — லண்டன்
திருமதி தேவகுஞ்சரி சிவநாயகம் — லண்டன்
செல்வி கு. சந்திரமலர் — லண்டன்
செல்வன். கு. கிருபாகரன் - லண்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

எமது குடும்பத் தலைவராய் ஒளிவீசிய உத்தமர் உயர்திரு அ. நல்லையா அவர்கள் 26-01-1987 இல் எம்மை விட்டுப் பிரிந்த பொழுது ஈமச் சடங்குகளில் கலந்து கொண்டவர்களுக்கும், நல்லுதவிகளை வழங்கியவர்களுக்கும், 25-02-1987 இல் நிகழ்ந்த அந்தியேட்டிக் கிரியைகளிலும், வீட்டுக்கிருத்தியம், மாகேசுர பூஜை என்பவற்றிலும் கலந்து கொண்டவர்களுக்கும், பல்வேறு வழிகளில் உதவிகள் வழங்கியவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை நவில்கின்றோம்.

இங்ஙனம்
**மனைவி**
**திருமதி இராஜேஸ்வரி,**
**பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
பேரர்.

**வணக்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அமரர்

# உயர்திரு அ. நல்லையா அவர்கள்

தோற்றம்: 22 ★ 06 ★ 1926



மறைவு: 26 ★ 01 ★ 1987

நல்லியல் அமைந்த செல்வன் நல்லையா செம்ம லாவான்
வல்வினை கடிந்து விண்ணை விரைவினில் சேர்ந்து விட்டார்
மெல்லியல் மனைவி மக்கள் மாதுயர் அடைய அந்தோ
நல்வினை முடித்த அவர்தன் நல்லுயிர் சாந்தி அடைக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SIRI LANKA PRINTING WORKS JAFFNA • PHONE 24175 •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org